(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 20009** **Sub. Code : E 1 TL 11/ F 1 TL 11**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2024

First Semester

Part I — Tamil

POTHU TAMIL – I – TAMIL ILAKKIYA VARALARU – I

(For those who joined in July 2023-2024 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மொழியினைக் கட்டிக்காத்துச் செம்மொழியாக்கும் பேராற்றல் எதற்கு உண்டு?

(அ) இலக்கணத்திற்கு

(ஆ) இலக்கியத்திற்கு

(இ) இசைக்கு

(ஈ) திறனாய்வுக்கு

Scanned with OKEN Scanner

2. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர்

(அ) நம்பியாண்டார் நம்பி

(ஆ) நாதமுனிகள்

(இ) நாற்கவிராச நம்பி

(ஈ) பூரிக்கோ

3. உரையாசிரியர்களால் அதிகமாக மேற்கோளாக எடுத்தாளப்பட்ட நூல்

(அ) குறுந்தொகை (ஆ) நற்றிணை

(இ) புறநானூறு (ஈ) அகநானூறு

4. கள்வன் மகன் என்று தலைவி யாரைக் குறிப்பிடுகிறாள்?

(அ) பாணன்

(ஆ) பார்ப்பனன்

(இ) தலைவன்

(ஈ) தோழன்

5. வேளாண் வேதம் என்றழைக்கப்படும் நூல்

(அ) நாலடியார் (ஆ) திருக்குறள்

(இ) கம்பராமாயணம் (ஈ) குறுந்தொகை

6. இன்னாச் சொல் எனப்படுவது

(அ) இனிய சொல்

(ஆ) கனிவான சொல்

(இ) கருஞ்சொல்

(ஈ) பாராட்டு மொழி



Scanned with OKEN Scanner

7. சிவபெருமானுக்குக் காஞ்சியில் கோயில் கட்டியவன்

(அ) காடவர்மன் (ஆ) பல்லவன்

(இ) சோழன் (ஈ) பாண்டியன்

8. வழக்குரை காதையில் கனவு கண்ட பெண்ணரசி

(அ) கண்ணகி (ஆ) கோப்பெருந்தேவி

(இ) ஆதிமந்தி (ஈ) சேரமா தேவி

9. சூடிக் கொடுத்த சுடர்கொடி என்றழைக்கப் பெற்றவர்

(அ) மீனாட்சி அம்மை (ஆ) சரஸ்வதி தேவி

(இ) மகாலெட்சுமி (ஈ) ஆண்டாள்

10. இறைவன் எதில் அகப்படுவான்

(அ) பூஜைகளினால்

(ஆ) அன்பெனும் வலையில்

(இ) கோயில் கட்டுவதால்

(ஈ) நல்ல சிந்தனையில்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) நன்னூல் குறித்த செய்திகளை கட்டுரைத்திடுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுக.



Scanned with OKEN Scanner

12. (அ) "நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்" என்னும் மருதத் திணைப் பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) நல்லோர் விரிச்சி கேட்டுத் தலைவியை ஆற்றுவித்த தன்மையினை எடுத்துரைத்திடுக.

13. (அ) கல்வி யழகே சிறந்த அழகாகும் என்பதை நாலடியார் பாடல் வழி எடுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) வாழ்வின் மனிதன் இனிது என்று உணர்தலுக்கு உரிய செய்திகளைப் பூதஞ்சேந்தனார் வழி விளக்குக.

14. (அ) குகனது தோற்றச் சிறப்பினை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) மான் தன் இணை மற்றும் தன் குட்டியைக் குறித்து வருந்திப் புலம்பிய செய்திகளைத் தொகுத்துரைத்திடுக.

15. (அ) திருநாவுக்கரசரின் அச்சமற்ற தன்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) பூதத்தாழ்வர் திருமாலுக்கு ஏற்றிய ஞான விளக்குக் குறித்து எடுத்துரைத்திடுக.



Scanned with OKEN Scanner

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை இலக்கணம் கூறி, ஆற்றுப்படை நூல்களைச் சுருக்கிச் கூறுக.

17. (அ) அரசன் வாழ்வும் வேடன் வாழ்வும் ஒன்றே எனப் புறநானூறு கூறும் பொதுமையை எடுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) தலைவி ஆற்றியிருந்தமையையும் தலைவன் தேரின் வருகையையும் முல்லைப்பாட்டு எங்ஙனம் எடுத்துரைத்திடுக.

18. (அ) திருக்குறளில் அறன் வலியுறுத்தல் பகுதியில் வலியுறுத்திக் கூறும் செய்திகளைத் தொகுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) பெண்மைக்கு அழகு எது என்பதை நான்மணிக்கடிகை பாடல் வழி விளக்குக.



Scanned with OKEN Scanner

19. (அ) கண்ணகி பாண்டியன் அவையில் வழக்குரைத்த திறத்தினை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பூசலார் நாயனாரின் சிறப்புகளை இறைவன் உலகறியச் செய்த பாங்கினை விளக்குக.

20. (அ) சிவபெருமானிடம் அன்பு கொள்ளும் தன்மை குறித்துத் திருமூலர் கூறுவனவற்றைத் தொகுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) ஆனந்தக் களிப்பு மூலம் கடுவெளி சித்தர் குறிப்பிடும் தத்துவக் கருத்துக்களை விளக்கிக் கூறுக.

---



Scanned with OKEN Scanner

(6 pages) **Reg. No. :** ......................................

**Code No. : 20011** **Sub. Code : E1TL 31**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2024.

Third Semester

Part I — Tamil

Pothu Tamil – III — TAMILAGA VARALARUM PANPAADUM

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிவதால் ஏற்படும் நிலப்பகுதி எது?

   (அ) நெய்தல் (ஆ) மருதம்

   (இ) பாலை (ஈ) தீவு

Scanned with OKEN Scanner

2. காவிரி நதியைப் பாதையமைத்துச் சோழ மண்டலத்திற்குள் கொண்டு வந்து பாயச் செய்த அரசன் யார்?

(அ) காந்தன் (ஆ) கரிகாலன்

(இ) இராஜ ராஜன் (ஈ) அதித்தன்

3. இலங்கையின் வரலாறு கூறும் நூல் எது?

(அ) அர்த்த சாஸ்திரம் (ஆ) மகாவம்சம்

(இ) இராமாயணம் (ஈ) இராவண காவியம்

4. 'குலக்கல்வி முறை' கொண்டு வர வலியுறுத்தியவர் யார்?

(அ) இராஜாஜி (ஆ) திலகர்

(இ) பெரியார் (ஈ) உ.வே.சா

5. தனித்தமிழ் இயக்கத்தை நிறுவியவர்?

(அ) மறைமலை அடிகள்

(ஆ) அண்ணாதுரை

(இ) கி.ஆ.பெ.விசுவநாதன்

(ஈ) கல்கி

6. வேளாண் பல்கலைக்கழகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(அ) 1962 (ஆ) 1971

(இ) 1968 (ஈ) 1981



Scanned with OKEN Scanner

7. முகம்மதியர்களின் ஆட்சியில் பொற்காலமாகச் சுட்டப்படும் ஆட்சிக்காலம் யாருடையது?

(அ) பாபர் (ஆ) அக்பர்

(இ) ஔரங்கசீப் (ஈ) ஷாஜகான்

8. இந்திரனுக்குக் காவிரிபூம்பட்டினத்தில் விழா எடுத்த மன்னன் யார்?

(அ) அதித்த சோழன்

(ஆ) எறிந்த தொடி தோட்செம்பியன்

(இ) கரிகால் பெருவளத்தான்

(ஈ) அதிராஜேந்திரன்

9. புதுச்சேரி எந்த ஆண்டு டச்சுக்காரர்கள் வசம் போனது?

(அ) 1690 (ஆ) 1697

(இ) 1693 (ஈ) 1700

10. மெய்யறிவு மெய்யறம் போன்ற நூல்களை எழுதியவர்?

(அ) பாரதிதாசன்

(ஆ) வ.உ.சி.

(இ) திரு.வி.க.

(ஈ) தொ.மு.சி.



Scanned with OKEN Scanner

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா 'அ' அல்லது 'ஆ' தேர்ந்தெடுக்க.

11\. (அ) சங்ககால மக்களின் கல்வி பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முச்சங்க வரலாறு குறித்து நீவிர் அறிவன யாவை?

12\. (அ) சோழர் ஆட்சியின் வரைவிலக்கணத்தை விவரி.

(அல்லது)

(ஆ) இரண்டாம் பானிபட் போர் பற்றி குறிப்பு வரைக.

13\. (அ) திருமலை நாயக்கரின் ஆட்சிச் சிறப்பும் கலை ஈடுபாடும் எத்தகையது ஆய்க.

(அல்லது)

(ஆ) ஒத்துழையாமை இயக்கம் பற்றி விளக்குக.

14\. (அ) சங்க கால மக்களின் பொழுதுபோக்கு, விளையாட்டுப் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) கட்டபொம்மன், கான்சாகிப் பற்றி குறிப்பு வரைக.



Scanned with OKEN Scanner

15. (அ) கலைச்சொல்லாக்கம் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) விடுதலைக்குப் பின் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் புலப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா 'அ' அல்லது 'ஆ' தேர்ந்தெடுக்க.

16. (அ) சங்க கால போர் முறை பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சங்க கால ஆட்சி முறையினை விவரிக்க.

17. (அ) 'கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்' என்னும் பழமொழி நானூறு வரிகள் உணர்த்த விழைவது யாது? விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாபரின் வெற்றிக்கான காரணங்களைத் தொகுத்துரைக்க.

18. (அ) பண்டைத் தமிழரின் அயலகத் தொடர்புகள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பிரெஞ்சு காலனி ஆதிக்கத்தில் கிடைத்த முன்னேற்றங்கள் குறித்து எடுத்துரைக்க.



Scanned with OKEN Scanner

19. (அ) நாள்தோறும் பயன்படும் அறிவியல் கலைச்சொற்கள் பத்தினைத் தமிழாக்கத்தோடு பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) முற்காலச் சோழர்களின் வரலாற்றை விவரிக்க.

20. (அ) சுழற்பொருள் வகைகளில் இடம்பெறும் பண்பாட்டுச் சூழல் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மொழி பெயர்ப்பின் பொருள் வகைகளில் ஒன்றான ஒப்பீட்டுப் பொருள் பற்றி விவரி.

---



Scanned with OKEN Scanner